**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**
**நான்காம் தவணைப் பரீட்சை - 2022**
# Conducted by Field Work Centre, Thondaimanaru
**4th Term Examination - 2022**

FWC

| | | |
|---|---|---|
| **வணிகக்கல்வி - I** <br> **Business Studies - I** | **Two Hours** <br> **Gr. 13 (2022)** | **32** **T** **I** |

**அறிவுறுத்தல்கள்**
- எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தளிலேயே விடை எழுதுக.
- மேலே தரப்பட்டுள்ள இடைவெளியில உமது சுட்டெண்ணை தெளிவாக எழுதுக.
- *01 தொடக்கம் 30 வரையுள்ள வினாக்களுக்குச் சரியான விடையைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை தரப்பட்டுள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.*
- *31 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்களுக்குச் சுருக்கமான விடைகளைத் தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.*
- ஒவ்வொரு வினாவுக்கும் இரண்டு புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.

சுட்டெண் :…………………..……

பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்

| வினா இல. | புள்ளிகள் |
|---|---|
| 01 – 30 | |
| 31 – 50 | |
| **மொத்தம்** | |

01. கடந்த ஆண்டில் தேசிய பாடசாலையாக்கப்பட்ட உமது கல்லூரியின் நுழைவாயில் அமைப்பு உமது பாடசாலை பழைய மாணவர் சங்கத்தால் நிர்மாணிக்கப்பட்டுள்ளது இதன் நிர்மாணங்கள் சார்ந்த உற்பத்திகளை உள்ளடக்கும் தொகுதியாக அமைவது.
(1) முதல்நிலை மற்றும் விவசாயத்துறை
(2) இரண்டாம்நிலை மற்றும் சேவைத்துறை
(3) இரண்டாம்நிலை மற்றும் கைத்தொழில்துறை
(4) மூன்றாம் நிலை மற்றும் சேவைத்துறை
(5) முதன்நிலை மற்றும் கைத்தொழில் துறை (………)

02. A- எல்லா மனிதர்களுடைய விருப்பங்களையும் வணிகம் பூர்த்தியாக்குகின்றது
B- மனிதனுடைய எல்லா விருப்பங்களையும் வணிகம் பூர்த்தியாக்குகின்றது
மேற்குறித்த கூற்றுக்கள் தொடர்பில் மிகச் சரியான கருத்து யாது.
1) A, B ஆகிய இரண்டும் சரி (2) A,B ஆகிய இரண்டும் தவறானது
(3) A சரியானது B தவறானது (4) B சரியானது A தவறானது
(5) A இல் B தங்கியுள்ளது (………)

03. பொருளாதார வாழ்தன்மைக்கு வணிகங்கள் பங்களிப்புச் செய்யும் முறைகள் சிலவும், வணிகத்தின் நவீன போக்குகள் சிலவும் கீழே தரப்பட்டுள்ளது.
A. புத்துருவாக்கம்
B. வேலை வாய்ப்பு
C. பூகோள மயமாக்கம்
D. பசுமை உற்பத்தி
E. மாற்றமடையும் சிக்கலான விருப்பங்களை நிறைவு செய்தல்
F. இலத்திரனியல் வணிகம்
G. தேசிய பொருளாதார விருத்தி
மேலே கூறப்பட்டவற்றில் இருந்து பொருளாதார வாழ்தன்மைக்கு வணிகங்கள் பங்களிப்புச் செய்யும் முறைகளை மட்டும் கொண்ட தொகுதியைத் தெரிவு செய்க.
(1) A,B,D,G (2) A,B,C,G (3) A,B,E,G (4) B,D,E,G (5) B,D,F,G
(………)



kalvi.lk

04. கொவிற் - 19 தொற்றுக் காலத்தில் தனது வேலையை இழந்த சுந்தர் என்பவர் தனக்கு சொந்தமான காணியில் விவசாய நடவடிக்கைகளை முன்னெடுத்தார் இதன் போது அரசினால் வளமாக்கிகள் மீது தடைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் அவற்றின் மீதான விலைகளும் அதிகரித்தது இந்நிலையை எதிர்கொள்வதற்கு தனக்குத் தெரிந்த தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி இயற்கைப் பசளைகளைத் தயாரித்து விவசாயத்தை தொடர்ந்தார் இவருடைய முயற்சி வெற்றியளித்தமையால் இவருடைய உற்பத்திகளுக்கான கேள்வி உலகலாவிய ரீதியில் ஏற்பட்டது
மேற்குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய பேரினச் சூழல் மாறிகளின் எண்ணிக்கை யாது?

(1) 3 (2) 4 (3) 5 (4) 6 (5) 7

(………)

05. வணிகமொன்று சூழல் நிலைபேறான தன்மையினைக் கொண்டுள்ளது என்பதனை உறுதிப்படுத்துவதற்கு மேற்கொள்ள வேண்டிய செயற்பாடாக கருத முடியாதது எது?

(1) ஆபத்து விளைவிக்கும் பொருட்களைப் பாதுகாப்பாகப் பயன்படுத்தல்.
(2) உயரினங்களின் பல்லினத் தன்மையைப் பாதுகாத்தல்
(3) சூரிய சக்தி போன்ற தீங்கு விளைவிக்காத சக்தியைப் பயன்படுத்தல்
(4) கழிவுப் பொருள்முகாமைத்துவத்தினைப் பயன்படுத்தல்
(5) மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கு பங்களிப்புச் செய்தல் (………)

06. பின்வருவன இலங்கை அரசங்கத்தால் நடைமுறைப்படுத்தப்பட்ட வரிவகைகளுள் சிலவாகும்.

A. பெறுமதி சேர்வரி
B. மூலதன இலாபவரி
C. வருமான வரி
D. பங்கு இலாபவரி
E. உழைக்கும் போது செலுத்தும் வரி
F. உற்பத்தி வரி
G. தேச நிர்மாண வரி
H. இறக்குமதி வரி

மேற்குறித்தவற்றில் தற்போது நடைமுறையில் இல்லாத வரிவகைகளை மட்டும் கொண்ட தொகுதியைத் தெரிவு செய்க.

(1) A,B,F (2) A,G,H (3) B,E,G (4) B,E,H (5) C,F,G

(………)

07. அரசாங்கத்தின் நிதிக்கொள்கைக்கு உரித்தான ஒரு தொழிற்பாடாக அமைவது.

(1) அரசின் வரி அல்லா வருமானங்கள் அதிகரித்தல்
(2) திறந்தத்த சந்தை நடவடிக்களை மேற்கொள்ளல்
(3) அரச நடைமுறைச் செலவீனத்தைக் குறைத்தல்
(4) பற்றாக்குறை வரவு செலவுத்திட்டத்தை தயாரித்தல்
(5) பேரினப் பொருளாதார நிலைப்புத்தன்மையை பேணுதல் (………)

08. நுகர்வோரைப் பாதுகாப்பதற்காக சுகாதாரத்திணைக்களகத்தால் நடைமுறைப்படுத்தப்படும் சட்டங்களை மட்டும் உள்ளடக்கிய தொகுதியைத் தெரிவு செய்க.

(1) நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபைச்சட்டம், அழகு சாதனக் கருவிகள் மற்றும் மருத்துவப் பொருட்சட்டம்
(2) உணவுச்சட்டம், நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டம்
(3) இலங்கைத் தரக்கட்டளைச் சட்டம், உணவுச்சட்டம்
(4) அழகு சாதனக் கருவிகள் மற்றும் மருத்துவப்பொருட்சட்டம்
(5) தேசிய சூழல் பாதுகாப்புச்சட்டம், அளவீட்டு அலகுகள் நியமங்கள் கட்டளைச் சட்டம்

(……….)



kalvi.lk

09. பின்வரும் கூற்றுக்களில் வரையறுத்த பொதுக்கம்பனிகள் தொடர்பாக தவறான கூற்று எது?

(1) ஆகக்குறைந்த பங்குதாரர்களின் எண்ணிக்கை 01 ஆகும்.
(2) பங்குகளை பங்குதாரர்களிடையில் சுதந்திரமாகக் கைமாற்ற முடியும்.
(3) பங்குதாரர்களுக்கு பங்கு இலாபம் வழங்கப்படும் போது கடன் தீர்க்கும் நிலை பற்றிய சோதனை அவசியமில்லை
(4) வருடாந்த அறிக்கைகளை வெளியிடுவது கட்டாயம்
(5) ஆகக் குறைந்த இயக்குனர் எண்ணிக்கை 02 ஆகும் (………)

10. வரையறுத்த லங்கா கார் உற்பத்தி நிறுவனம் ஒன்று அவற்றுக்கான கண்ணாடி உற்பத்தி நிறுவனம் ஒன்றுடன் இணைதல்.

(1) முன்னோக்கிய நிலைக்குத்து இணைவு (2) பின்னோக்கிய நிலைக்குத்து இணைவு
(3) முன்னோக்கிய கிடை இணைவு (4) முரண்பாடான இணைப்பு
(5) பின்னோக்கிய கிடை இணைவு (………)

11. கமல் என்பர் மோட்டார் வாகனங்கள் மீது அதிக ஆர்வம் கொண்டவர் இவர் தனது தொடர்ச்சியான ஆராட்சியின் மூலம் சூரிய ஒளியில் இயங்கக் கூடிய மோட்டார் சைக்கிள் ஒன்றைக் கண்டுபிடித்தார். இவர் தனது அற்பணிப்பினாலும் தன்நம்பிக்கையினாலும் குறித்த மோட்டார் சைக்கிளை இலங்கை முழுவதும் வழங்கத் தீர்மானித்து இடர்களை ஏற்பதற்கு தயாரானார்.
மேற்குறித்த சம்பவத்தில் கூறப்பட்டுள்ள முயற்சியாண்மையின் பொதுவான பண்புகள் எத்தனை

(1) 3 (2) 4 (3) 5 (4) 6 (5) 7

(………)

12. பின்வருவனவற்றில் சிறிய நடுத்தர வணிகம் ஒன்று ஆரம்பிக்கும் போது கவனத்தில் கொள்ளத் தேவையற்ற காரணி எது?.

(1) தேவையான உட்கட்டமைப்பு வசதிகளைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருத்தல்
(2) வணிக ஒழுங்கமைத்தல் முறை
(3) நடைமுறையில் உள்ள சட்டதிட்டங்கள்
(4) ஆரம்ப மூலதனம், தொழிற்படு மூலதனம்
(5) தமது ஆற்றல், திறன்களை அறிந்து கொள்ளலும் மதிப்பீடு செய்தலும் (………)

13. அஸ்வின் என்பவர் தனது மதாந்தச் சம்பளத்தில் 100000/= ஐ வங்கிக் கணக்கில் வைப்பிலிடுவதுடன் அப்பணத்தை வரவட்டையூடாக கொடுக்கல் வாங்கலில் ஈடுபவதை வழக்கமாகக் கொண்டிருப்பதுடன் 50000/= பெறுமதியான சலவை இயந்திரம் ஒன்றை உடனடியாக 15000/= செலுத்தி மிகுதிப்பணத்தை மூன்று சமதவணை அடிப்படையில் செலுத்துவதாக உடன்பட்டு கொள்வனவு செய்தார்.
மேற்குறித்த சம்பவத்தில் கூறப்பட்ட பணத்தின் தொழிற்பாடுகள் முறையே

(1) பரிமாற்று ஊடகம், பெறுமான அளவை, பெறுமானத் திரட்டு, பிற்போடப்பட்ட கொடுப்பனவு
(2) பெறுமானத் திரட்டு, பரிமாற்று ஊடகம், பெறுமான அளவை, பிற்போடப்பட்ட கொடுப்பனவு
(3) பெறுமானத் திரட்டு, பரிமாற்று ஊடகம், பிற்போடப்பட்ட கொடுப்பனவு, பெறுமான அளவை
(4) பெறுமான அளவை, பிற்போடப்பட்ட கொடுப்பனவு, பரிமாற்று ஊடகம், பெறுமானத் திரட்டு
(5) பிற்போடப்பட்ட கொடுப்பனவு, பெறுமானத் திரட்டு, பரிமாற்று ஊடகம், பெறுமான அளவை

(………)

14. இலங்கையின் நாணய பரிமாற்றுத் தொடர்பில் சரியான கூற்று யாது?

(1) சுதந்திரத்திற்கு முன்னர் இலங்கையில் நாணய முறைமைச் செயற்பாட்டிற்கு பொறுப்பாக இருந்த அமைப்பு பணச்சபை ஆகும்.
(2) 1949 ஆண்டு 48ம் இலக்க நிதிச்சட்டத்தின் மூலம் மத்திய வங்கி உருவாக்கப்பட்டது.
(3) இலங்கையில் பயன்படுத்திய குற்றி நாணயம், தாள் நாணயத்தில் பெறுமதி குறைந்தவையாக முறையே ¼ சதமும், 1 ரூபாவும் ஆகும்.
(4) தாள் நாணயம் ஒன்றில் மத்திய வங்கி ஆளுனரதும் ஜனதிபதியினதும் கையெழுத்துக்கள் காணப்படும்.
(5) 5000/= தங்க குற்றி நாணயம் 2008ம் ஆண்டு வெளியிடப்பட்டது. (………)



kalvi.lk

15. காசோலைப் பரிமாற்றம் தொடர்பில் தவறான கூற்று எது?

(1) காசோலைப்பயன்பாடு மாற்றுண்டியல் கட்டளைச் சட்டப்படி இடம் பெறுகின்றது.
(2) பெறுவோன் கணக்கு மட்டும் எனக்குறுக்குக் கோடிட்ட காசோலையையும் நிபந்தனையுடன் கைமாற்ற முடியும்.
(3) பெறுவோன் கணக்கு மட்டும், கைமாற்றதகாதது என குறுக்குக் கோட்டிட காசோலைகள் ஓர் நபரின் பெயரிலேயே அமைதல் வேண்டும்.
(4) காசோலை ஒன்றின் ஆயுள்காலம் 6 மாதங்கள் ஆகும்.
(5) காசு என வரையப்பட்ட குறுக்குக் கோட்டிடப்பட்ட காசோலையை சேமிப்புக் கணக்கில் வைப்புச் செய்ய முடியாது (………)

16. வணிகர் ஒருவரால் மேற்கொள்ளப்படுகின்ற காப்புறுதி ஒப்பந்தங்கள் சிலவாகும்.

A- மோட்டார் வாகனக் காப்புறுதி
B- ஊழியர் நட்ட ஈட்டுக் காப்புறுதி
C- தீ அபாயக் காப்புறுதி
D- கடலபாயக் காப்புறுதி
E- உற்பத்திப் பொருள் பொறுப்புக் காப்புறுதி

மேலே கூறப்பட்டவற்றில் பொறுப்புக் காப்புறுதி வகைகளை மட்டும் கொண்ட தொகுதியைத் தெரிவு செய்க.

(1) A,B,D (2) A,B,C (3) B,D,E (4) B,C,D (5) A,B,E

(………)

17. களஞ்சியசலை ஒன்று நிறுவும் போது கவனத்தில் கொள்ளத் தேவையற்ற காரணி எது?

(1) களஞ்சிய சாலையில் கருமமாற்றும் ஊழியர் எண்ணிக்கை
(2) கட்டட அமைப்புத் திட்டங்களும் வசதிகளும்
(3) பொருட்களின் தன்மை
(4) கிரயம்
(5) பண்டங்களை இடமாற்றும் திறன் (………)

18. விபத்துக்களை அறிவிக்கும் ஊதுகுளலானது ஒரு

(1) புற ரீதியான இலத்திரனியல் அல்லாத சைகை மூலமான தொடர்பாடல்
(2) புற ரீதியான இலத்திரனியல் சைகை மூலமான தொடர்பாடல்.
(3) அக ரீதியான இலத்திரனியல் சைகை ரீதியான தொடர்பாடல்
(4) அக ரீதியான இலத்திரனியல் வாய் மொழி மூலமான தொடர்பாடல்
(5) புற ரீதியான இலத்திரனியல் அல்லாத வாய்மொழி மூலமான தொடர்பாடல் (………)

19. USMCA அமைப்பில் அங்கத்துவம் பெறும் நாடுகள் முறையே

(1) ஐக்கிய அமெரிக்கா, மியான்மார், சீனா, ஆப்கானிஸ்தான்
(2) ஐக்கிய அமெரிக்கா, மலேசியா, சீனா, ஆப்கானிஸ்தான்
(3) ஐக்கிய அமெரிக்கா, மெக்சிக்கோ, கனடா
(4) ஐக்கிய அமெரிக்கா, மெக்சிக்கோ, சீனா, ஆப்கானிஸ்தான்
(5) ஐக்கிய அமெரிக்கா, மெக்சிக்கோ, சீனா, ஆஸ்திரியா (………)


kalvi.lk

20. ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் இடம்பெறக் கூடிய முகாமைத்துவக் கருமங்கள் தொடர்பான கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளது.

A- எதிர் காலத்தில் தமது உற்பத்திப் பொருட்களுக்கான சந்தைப்பங்கினை 25% இருந்து 35% அதிகரித்தல்.

B- சென்ற மாதம் எதிர்வு கூறப்பட்ட விற்பனை அலகுகள் 3000 ஆகும் ஆனால் உண்மையில் விற்பனை செய்யப்பட்ட அலகுகள் 2200 ஆகும் இதற்கான விலகல்கள் அறியப்பட்டு அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

C- சந்தைப்பங்கினை அதிகரிப்பதற்கு நவீன ரக வடிவமைப்புக்கள் மேற்கொள்ளக் கூடிய புதிய ஊழியர்கள் நால்வர் பயன்படுத்தப்பட்டுள்ளனர்.

D- தொழிற்சாலையில் பணிபுரியும் அனைவருக்கும் இலவசப் போக்குவரத்து ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டது.

மேற்குறிப்பிடப்பட்ட கூற்றுக்களுக்கு அமைய முகாமைத்துவத் தொழிற்பாடுகளைச் சரியான ஒழுங்கில் காட்டுவது

(1) கட்டுப்படுத்தல், திட்டமிடல், ஒழுங்கமைத்தல், நெறிப்படுத்தல்
(2) திட்டமிடல், ஒழுங்கமைத்தல், நெறிப்படுத்தல் கட்டுப்படுத்தல்
(3) ஒழுங்கமைத்தல், கட்டுப்படுத்தல், திட்டமிடல் நெறிப்படுத்தல்
(4) நெறிப்படுத்தல், கட்டுப்படுத்தல், ஒழுங்கமைத்தல், திட்டமிடல்
(5) திட்டமிடல், கட்டுப்படுத்தல், ஒழுங்கமைத்தல், நெறிப்படுத்தல் (………)

Education கல்வி අධ්‍යාපන

21. முகாமைத்துவச் செயற்பாடுகள் சில கீழே தரப்பட்டுள்ளது

A- நோக்கங்கள் உருவாக்குதல்
B- செயற்பாடுகளை இனங்காணல்
C- திணைக்களப்படுத்தல்
D- பல்வேறு மாற்றுவழிகளை மதிப்பீடு செய்தல்
E- வேலை செய்யும் நியமங்களை உருவாக்குதல்
F- வளங்களைப் பகிர்ந்தளித்தல்
G- செயற்பாட்டு விளைவுகளை அளவிடல்

மேலே தரப்பட்டவற்றில் ஒழுங்கமைத்தலின் படிமுறைகளை மட்டும் உள்ளடக்கிய தொகுதியைத் தெரிவு செய்க.

(1) ABFG (2) BCEF (3) BCFG (4) ABCG (5) ACFG

(………)

22. அதிகாரம் வழங்கப்படுவதன் மூலம் ஏற்படாத விளைவு குறிப்பிடப்பட்டுள்ள கூற்றினை தெரிவு செய்க.

1. நெருங்கிய தலைவரின் வேலையின் அளவு குறைதல்
2. நெருங்கிய தலைவரின் பயிற்சியும் அபிவிருத்தியும் அதிகரித்தல்
3. கீழ்மட்ட ஊழியர்களின் வேலையின் அளவு குறைதல்
4. ஊக்கமுடைய ஊழியர்கள் உருவாகுதல்
5. தொழில் அபிவிருத்திக்குக் கீழ்மட்ட ஊழியர்களைத் தயார்படுத்தல்

(………)



kalvi.lk

23. பின்வரும் அட்டவணையில் X நிரலானது ஒழுங்கமைத்தலுடன் தொடர்புடைய சில முக்கிய விடயங்களையும் Y நிரலானது அவற்றுக்கான விளக்கங்களையும் கொண்டுள்ளது

| X | Y |
|---|---|
| 1) அதிகாரம் | A- ஒர்தலைமைக்கு நேரடியாக அறிக்கையிட உள்ள ஊழியர் எண்ணிக்கை |
| 2) வகைகூறல் | B- ஒப்படைக்கப்பட்ட அதிகாரத்தை பயன்படுத்தி ஒப்படைக்கப்பட்ட கருமங்கள் நிறைவேற்றப்பட்டமை தொடர்பில் மேலதிகாரிக்கு அறிக்கையிடல் |
| 3) மையப்படுத்தல் | C- ஊழியருக்கான கட்டளைகள் ஒர்தரப்பு/ முகாமையினால் வழங்கப்பட வேண்டும். |
| 4) கட்டுப்பாட்டு விசாலம் | D- பதவி வழி உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சட்ட ரீதியான உரிமை |
| 5) கட்டளையிடலின் ஒரினத்தன்மை | E- தீர்மானம் எடுக்கும் அதிகாரம் உயர்மட்டத்தவர்களுக்கு மட்டும் காணப்படல் |

ஒழுங்கமைத்தல் தத்துவத்திற்கேற்ப அதன் விளக்கங்களை சரியான ஒழுங்கில் கூறும் கூற்று எது?
(1) D,B,E,A,C (2) B,D,E,A,C (3) D,A,C,B,E
(4) C,B,A,D,E (5) A,C,D,B,E

(………)

24. பின்வருவனவற்றிலிருந்து சரியான கூற்றுக்களை மட்டும் கொண்ட தொகுதியைத் தெரிவு செய்க.
A- செய்பவற்றைச் சரியாக செய்தல் பயனுறுதி ஆகும்.
B- பயனுறுதி என்பது வினைத்திறன், உற்பத்தித்திறன் மூலம் அளவிடப்படும்
C- ஓர் அலகு உள்ளீட்டுக்காகப் பெற்றுக் கொள்ளப்படும் வெளியீட்டின் அளவு உற்பத்தித்திறன் ஆகும்.
D- பயனுறுதி, வினைத்திறன் என்பன உற்பத்தித்திறன் மூலம் அளவிடப்படும்
E- சரியானவற்றினை செய்தல் என்பது என்ன பொருளை உற்பத்தி செய்தல் என்பதுடன் தொடர்புடையதாகும்.
(1) A,C,E (2) A,B,D (3) B,C,E (4) C,D,E (5) A,D,E

(………)

25. செயற்பாட்டு முகாமையில் உற்பத்திக் கட்டுப்பாடு என்பதுடன் தொடர்புபடாத விடயம் பின்வருவனவற்றுள் எது?
(1) இருப்புக் கட்டுப்பாடு
(2) தரக் கட்டுப்பாடு
(3) கொள்வனவுக் கட்டுப்பாடு
(4) இயந்திரக் கட்டுப்பாடு
(5) செயன்முறைக் கட்டுப்பாடு (………)

26. உங்கள் பாடசாலையில் அண்மையில் தொழிநுற்ப ஆய்வுகூடம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இதில் பயன்படுத்தப்படும் தள அமைப்பு முறை.
1) உற்பத்தி பொருள் தள அமைப்பு
2) நிலையான தள அமைப்பு
3) செயன்முறைத் தள அமைப்பு
4) தொகுதித் தள அமைப்பு
5) கலத் தள அமைப்பு (………)


kalvi.lk

27. பின்வரும் கூற்றுக்களில் சரியான கூற்றுக்களை உள்ளடக்கிய தொகுதியைத்தை தெரிவு செய்க.

A. பொருளாதாரக் கட்டளைக்கணியத்தில் இருப்புப் பராமரிப்புக் கிரயமும் அலகிற்கான கட்டளை கிரயமும் சமானாக காணப்படும்

B. அலகிற்கான பங்களிப்பு என்பது அலகிற்கான நிலையான கிரயம், அலகிற்கான இலாபத்திற்கும் சமானாக காணப்படும்

C. சமப்பாட்டுப்புள்ளி ஊடாக நீண்டகாலத் தீர்மானங்களை நிறைவேற்ற முடியும்

D. மறு கட்டளை மட்டத்தில் உள்ள தொகை மறு கட்டளைத் தொகை ஆகும்

E. கட்டளை இட்ட பொருட்கள் கட்டளை இடப்பட்ட தினத்திலிருந்து களஞ்சியத்தை வந்தடையும் காலம் முதன்மைக் கலம் ஆகும்.

1) A,B,E 2) A,C,E 3) A,C 4) B,C,E 5) B,E

(………)

28. அஸ்வின் என்பவர் போட்டோக்கொப்பி நிறுவனம் ஒன்றின் உரிமையாளர். இவரது நிறுவனத்திற்கு அருகில் உள்ள பாடசாலை அதிபரால் இவரது நிறுவனத்திற்கு 500 பரீட்சை வினாத்தாள்கள் அச்சிடுவதற்கான கட்டளை பெறப்பட்டது. இவரால் பயன்படுத்தப்படும் தொழில்நுற்பமுறை

(1) CAD (2) CAM (3) CNC (4) FMC (5) CIM

(………)

29. ரஞ்சன்நிறுவனத்தின் விற்பனையானது மிகவும் கீழ்மட்டத்திற்கு சென்றதுடன் குறித்த நிறுவனம் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட சந்தை ஆய்வு, மேம்படுத்தல்களால் குறித்த உற்பத்தியின் விற்பனை அதிகரிக்கத் தொடங்கியது. இத்நிலமையினை விளக்கும் உற்பத்தி வாழ்க்கைச் சுற்றுவட்டத்தின் கட்டம் எது?

(1) அபிவிருத்திக்கட்டம் (2) விருத்திக்கட்டம் (3) மீள்விருத்திக் கட்டம்

(4) முதிர்ச்சிக்கட்டம் (5) வீழ்ச்சிக்கட்டம் (………)

30. பின்வருவன சந்தைப்படுத்தலின் கருமங்களும் மைய சந்தைப்படுத்தல் எண்ணக்கருக்களும் ஆகும்.

A – சந்தைப்படுத்தல் ஆராட்சி

B – சந்தைத்துண்டமாக்கலும் இலக்குச் சந்தையும்

C – உணர்வுகளும் பிரவேசமும்

D – விலையிடல்

E – குறியிடல்

F – சந்தைப்படுத்தல் சூழல்

G – விற்பனையின் பின்னரானசேவை

I – மேம்படுத்தல்

J பரிமாற்றமும் கொடுக்கல் வாங்கலும்

மேலே கூறப்பட்டவற்றில் மைய சந்தைப்படுத்தல் எண்ணக்கருக்களை மட்டும் கொண்ட தொகுதியைத் தெரிவு செய்க.

(1) A, B, C, G (2) A, C, G, J (3) B, C, I, J

(4) B, C, F, J (5) C, D, F, J (………)

- ***31 – 40* வரையான வினாக்களுக்கு மிகவும் பொருத்தமான சொற்களைப் பயன்படுத்தி இடைவெளி நிரப்புக.**

31. அ. மனித தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு ………………………………. ஏற்படுகின்ற விருப்பம் ……………………… ஆகும்.

ஆ. ஓர் நாட்டிற்கு சொந்தமான உற்பத்தி வளங்களைப் பயன்படுத்தி ஆண்டொன்றில் உற்பத்தியாக்கப்பட்ட மொத்த வெளியீடு ……………………………….. என அழைக்கப்படுவதுடன் இது ………………………….. அடிப்படையாகக் கொண்டு கணிப்பிடப்படுகின்றது.

32. அ. எதிர்கால சமூகத்திற்காக நிறுவனம் ஒன்றில் கட்டியெழுப்பப்படும் மரபுகள் நிறுவன …………………….. என அழைக்கப்படுவதுடன் இவற்றின் சாதகமான நிலமை நிறுவனத்திற்கு ஓர் ……………………………… ஆகவும் காணப்படும்.

ஆ) சமூக நிலைபேறான அபிவிருத்தியினதும் பொருளாதார நிலைபேறான அபிவிருத்தியினதும் சேர்க்கை ……………………… எனவும் சூழல் நிலைபேறான பாதுகாப்பினதும், பொருளாதார நிலைபேறான அபிவிருத்தியினதும் சேர்க்கை ………………………….. எனவும் அழைக்கப்படும்.

33. அ) தற்போது கொள்கை வட்டி வீதங்கள் என்பதனுள் …………………………………, …………………………………… என்பன உள்ளடக்கப்படுகின்றது.

ஆ) இறைக்கொள்கையானது ……………………….. ஆல் வகுத்து நடைமுறைப்படுத்தப்படும் அதேவேளை நாணயக் கொள்கை ஆனது …………………………. ஆல் வகுத்து நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

34. அ) தனிஉரிமை வணிகங்கள் சட்டப்பிரகாரம் …………………………….. இல் பதிவு செய்யப்பட வேண்டியவையாகக் காணப்படுவதுடன் நடைமுறையில் அவை …………………….. இல் பதிவு செய்யப்படுகின்றது.

ஆ) தனியார்துறையில் பதிவுக்கட்டணம் இன்றி கட்டாயம் பதிவு செய்யவேண்டிய வணிக அமைப்பாக ……………………………… காணப்படுவதுடன் இவை …………………….. நோக்கற்ற வணிகம் ஆகும்.

35. அ) கொவிற் தொற்றிலிருந்து பாதுகாக்கக்கூடிய வகையில் முகக்கவசம் ஒன்றினை நவீன முறையில் வடிவமைத்தல் …………………………… முயற்சியாண்மை என அழைக்கப்படுவதுடன் அவை சூழலை மாசுபடுத்தாதவகையாகக் காணப்படும் போது அது ……………………………. முயற்சியாண்மை எனவும் அழைக்கப்படும்.

ஆ) சிற்றளவு வணிகங்களுக்கு உதவும் நிறுவனங்களில் NDC, CEA ஆகியவற்றின் விரிவாக்கம் முறையே ………………………………., ……………………………………… ஆகும்.



kalvi.lk

36\. அ) அண்மைக்காலத்தில் விசேட வகை நிதிநிறுவனம் என்ற வகைக்குள் உள்வாங்கப்பட்ட நிறுவனமாக ………………………………. கருதப்படுவதுடன் இலங்கை மத்தியவங்கியானது …………………………….. வகைக்குள் உள்ளடக்கப்படுகின்றது.

ஆ) கடல் அபாயக் காப்புறுதியின் போது காப்புறுதி ……………………………………, ……………………… உரிமை காணப்பட வேண்டும்.

37\. அ) ஏற்றுமதியாளர் தனது கொடுப்பனவு தொடர்பான இடரினைக் குறைப்பதற்காக இறக்குமதியாளரிடம் இருந்து ………………………………….. ஐ எதிர்பார்ப்பதுடன் இறக்குமதியாளரது வங்கி குறித்த ஆவணம் தொடர்பிலான இடரைக் குறைப்பதற்கு இறக்குமதியாளரிடம் இருந்து ………………………………. ஐ எதிர்பார்க்கின்றது.

ஆ) முதல்வர் சார்பாக உற்பத்திப் பொருட்களைக் கடனுக்கு விற்பனை செய்வதற்கும் அதற்கான கடன்பணத்தை அறவிட்டுக் கொடுக்க வேண்டிய கடப்பாட்டுடன் காணப்படுபவர் …………………………………. எனவும் அவரது சேவைக்காக வழங்கப்படும் வெகுமதி ……………………. எனவும் அழைக்கப்படும்.

38\. அ) அமைப்பொன்றின் இலக்குகள் மற்றும் நோக்கத்தினை…………………………………. மிக்க முறையில் அடைவதற்காக அருமையான வளங்கள் …………………….. ஆகப் பயன்படுத்தப்படுகின்றது.

ஆ) அமைப்பொன்றில் …………………………. மட்ட முகாமையாளர்கள் உயர்வான எண்ணக்கருவாத்திறனையும், கீழ்மட்ட முகாமையாளர்கள் குறைவான ……………………………. திறனையும் கொண்டுள்ளார்.

39\. அ) பொதுவாகக் களஞ்சியங்களில் இருப்புத் தொடர்பில் கட்டளையிடும் அளவுகள் அதிகரிக் அதிகரிக்க …………………………….. கிரயம் அதிகரித்துச் செல்லும் அதேவேளை ………………………… கிரயம் குறைவடையும்

ஆ) உற்பத்தி வரிசை (Product range)…………………………… உற்பத்தியில் பல்வகையாகவும், கட்டளை உற்பத்தியில் …………………………… வகையாகவும் காணப்படும்.

40\. அ) விளம்பரங்கள். விற்பனை மேம்படுத்தல்கள் என்பன ……………………………. எண்ணக்கருவுடன் தோற்றம் பெற்றவையாகவும், பாடசாலைகள், வணக்கத்தலங்களுக்கு அருகில் மதுபான நிலையங்களை நிறுவக்கூடாது என்பது ………………………….. எண்ணக்கருவினையும் வலியுறுத்தப்படுகின்றது.

ஆ) ரவி என்பவர் சிறந்த ஓர் வணிகக்கல்வி ஆசன். அவர் தனது பிரத்தியோக வகுப்புக்கள் தொடர்பான விளம்பரம் ஒன்றை உதயன் நாழிதளில் பிரசுரித்தார். இது ……………………….. ஊடகமாக கருதப்படுவதுடன், அவரது பழைய மாணவர்கள் அவரது ஆளுமை தொடர்பில் ஏனைய மாணவர்களுக்கு தகவலழித்தல்………………………….. ஊடகம் ஆகவும் கருதப்படுகின்றது.



kalvi.lk

- ***41 – 50 வரையான வினாக்களுக்கு பொருத்தமான விடையை எழுதுக.***

41. பொருளாதார வாழ்தன்மைக்கு வணிகங்கள் பங்களிப்புச் செய்யும் முறைகளைக் குறிப்பிடுக.

*1.* ……………………………………………………………………………………………………

*2.* ……………………………………………………………………………………………………

*3.* ……………………………………………………………………………………………………

*4.* ……………………………………………………………………………………………………

42. வணிக ஒழுக்க நெறிகளின் வகைகளைக் குறிப்பிடுக.

*1.* …………………………………………………………………………………………………..

*2.* …………………………………………………………………………………………………..

*3.* …………………………………………………………………………………………………..

*4.* …………………………………………………………………………………………………..

43. கூட்டுறவு வணிகங்களுடன் தொடர்புடைய அரச நிறுவனங்களைக் குறிப்பிடுக.

*1.* …………………………………………………………………………………………………..

*2.* …………………………………………………………………………………………………..

*3.* …………………………………………………………………………………………………..

*4.* …………………………………………………………………………………………………..

44. களஞ்சியசாலை ஒன்றில் பொருட்களை இடத்திற்கிடம் நகர்த்துவதற்கு பயன்படுத்தப்படும் உபகரணங்கள் நான்கினைக் குறிப்பிடுக.

1. …………………………………………………………………………………………………..

2. …………………………………………………………………………………………………..

3. …………………………………………………………………………………………………..

4. …………………………………………………………………………………………………..

45. சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) நோக்கங்கள் எவை?

*1.* …………………………………………………………………………………………………..

*2.* …………………………………………………………………………………………………..

*3.* …………………………………………………………………………………………………..

*4.* …………………………………………………………………………………………………..

46. சாதாரண திறண்களைக் காட்டிலும் ஓர்முகாமையாளர் கொண்டிருக்கவேண்டிய ஏனைய திறன்கள் எவை?

*1.* …………………………………………………………………………………………………..

*2.* …………………………………………………………………………………………………..

*3.* …………………………………………………………………………………………………..

*4.* …………………………………………………………………………………………………..



kalvi.lk

47. வணிகத்தில் முகாமையாளருடன் ஒப்பிடும்போது தலைவர் ஒருவர் கொண்டிருக்கக் கூடிய தனித்துவமான பண்புகள் எவை?

1. …………………………………………………………………………………………………..
2. …………………………………………………………………………………………………..
3. …………………………………………………………………………………………………..
4. …………………………………………………………………………………………………..

48. இருப்புக்கட்டுப்பாட்டின் போது பயன்படுத்தப்படும் நுற்பமுறைகளைக் குறிப்பிடுக.

1. …………………………………………………………………………………………………..
2. …………………………………………………………………………………………………..
3. …………………………………………………………………………………………………..
4. …………………………………………………………………………………………………..

49. உற்பத்திச் செயற்பாட்டில் பயன்படுத்தப்படும் நவீன நுற்பமுறைகள் நான்கினைக் குறிப்பிடுக.

1. …………………………………………………………………………………………………..
2. …………………………………………………………………………………………………..
3. …………………………………………………………………………………………………..
4. …………………………………………………………………………………………………..

50. சேவைச்சந்தைப்படுதலில் காணப்படும் போட்டியின் வகைகள் நான்கினைக் குறிப்பிடுக.

1. …………………………………………………………………………………………………..
2. …………………………………………………………………………………………………..
3. …………………………………………………………………………………………………..
4. …………………………………………………………………………………………………..

Education கல்வி අධ්‍යාපන

**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**
**நான்காம் தவணைப் பரீட்சை - 2022**
**Conducted by Field Work Centre, Thondaimanaru**
**4th Term Examination - 2022**

FWC

| | | | | |
|---|---|---|---|---|
| **வணிகக்கல்வி - II**<br>**Business Studies - II** | **Three Hours and ten minutes**<br>**Gr. 13 (2022)** | **33** | **T** | **II** |

❖ ***வினாப்பத்திரத்தை வாசித்து வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தை பயன்படுத்துக.***

***அறிவுறுத்தல்கள் :-***

❖ ***ஒவ்வொரு பகுதியிலிருந்தும் ஆகக்குறைந்தது இரண்டு வினாக்களையேனும் தெரிவுசெய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.***

**பகுதி I**

01) ஐங்கரன் என்பவர் யாழ்ப்பாணம் கைதடிக் கிராமத்தில் தனது காணி ஒன்றில் விவசாயப்பண்ணை ஒன்றை ஆரம்பித்தார். இவர் பல்வேறு மரக்கறிவகைகளைப் பயிரிட்டு அவ்விளைபொருட்களைப் பதனிட்டு வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்வதுடன் மீதமானவற்றை மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனை செய்வதும், காலப்போக்கில் மரக்கறிகளை மூலப்பொருளாகக் கொண்டு சோயாவையும் உற்பத்தி செய்து 'ஐங் சோயா' என்ற பண்டக்குறிப்பெயரில் அவற்றைச் சந்தைப்படுத்திவருகின்றார். இவர் தனது மரக்கறித்தோட்டத்தை சேதன முறையிலேயே மேற்கொண்டு வருவதுடன் அவர் தேவையான உரவகைகளை தனது பண்ணையில் வைத்து தயாரித்து விவசாயம் மேற்கொண்டமையால் இவரது உற்பத்திகளுக்கான கேள்வியும் நாளாந்தம் அதிகரித்து வருகின்றது.

1. அ) மேற்படி வணிகத்தின் பண்புகள் நான்கினைக் குறிப்பிடுக.
   ஆ) மேற்படி வணிகத்தின் அடிப்படைக் கருமங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
2. மேற்படி வணிகத்தை நீர் கற்ற எவையேனும் நான்கு வணிக வகைப்படுத்தல் அடிப்படைகளின் கீழ் வகைப்படுத்துக.
3. அ) மேற்குறித்த வணிகம் பொருள் உற்பத்தி வணிகமாகவா அல்லது சேவை உற்பத்தி வணிகமாகவா கருதமுடியும் காரணம் தருக.
   ஆ) மேற்குறித்த வணிகத்தினால் அரசின் பொருளாதார நோக்கை அடைவதற்கு வழங்கக் கூடிய பங்களிப்புக்கள் எவை?
4. அ) மேற்குறித்த வணிகத்தின் வாய்ப்புக்கள் அச்சுறுத்தல்கள் தலா இரண்டு வீதம் குறிப்பிடுக.
   ஆ) மேற்கூறப்பட்ட விடயத்தில் தேக ஆரோக்கியம் பாதுகாக்கப்படும் என்பதற்கான சான்றாக எதனைக் கருதுவீர்?
5. மேற்குறித்த வணிகத்தில் அகக்றை செலுத்தும் பிரிவினர்கள் நான்குபேரைக் குறிப்பிட்டு அவர்கள் அக்கறை செலுத்துவதற்கான காரணத்தையும் குறிப்பிடுக.

02) 1. அ) வணிகங்கள் சமூகரீதியான பொறுப்புக்களை நிறைவேற்றுவதன் மூலம் தமது நோக்கங்களை இலகுவாக அடைந்துகொள்ள முடியும் வணிக நிறுவனங்கள் சமூகப் பொறுப்புக்களைத் தாங்குவதால் ஏற்படக்கூடிய அனுகூலங்கள் எவை?
   ஆ) வணிகநிறுவனம் ஒன்று செயல்முகாமை தொடர்பில் கவனஞ் செலுத்த வேண்டிய ஒழுக்கங்கள் நான்கினைக் குறிப்பிடுக.
2. அ) சமகாலத்தில் இலங்கை மத்திய வங்கி பணவீக்கத்தினை கட்டுப்படுத்த முடியாதவாறு திணறுகின்றது.
   மத்தியவங்கி பணவீக்கத்தை கட்டுப்படுத்துவதற்கு பயன்படுத்தும் எவையேனும் நான்கு கருவினை குறிப்பிடுக.
   ஆ) சமகாலத்தில் நிலவுகின்ற திரவக்காசுப் பற்றாக்குறையினை எதிர் கொள்ள அரசு முன்னெடுத்துள்ள நடவடிக்கைகள் நான்கினைக் குறிப்பிடுக.



kalvi.lk

3. அ) சமகாலத்தில் உலகலாவியரீதியில் நிலைபேறான அபிவிருத்தி தொடர்பால் அதிகம் பேசப்படுகின்றது. பொருளாதார நிலைபேறான அபிவிருத்திக்காக வணிகங்கள் மேற்கொள்ளக்கூடிய பங்களிப்புக்கள் நான்கினைக் குறிப்பிடுக.

ஆ) நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான குறிக்கோள்கள் நான்கினைக் குறிப்பிடுக.

4. ராஜா என்பவர் தனது சொந்த ஊரில் உள்ள காணி ஒன்றினை விற்றுப்பெற்ற பணத்தினைப் பயன்படுத்தி ராஜீ களஞ்சியம் என்ற பெயரில் ஒரு வணிகத்தை ஆரம்பித்தார். காலப்போக்கில் அவரது நண்பனான செல்வா என்பரை இணைத்து ஓர் பங்குடமை வணிகமாக மாற்றுவதற்கு தீர்மானித்தார். அதற்கு செல்வா அதனை ஓர் செந்தக் கம்பனியாக மாற்றுமாறு கோரிக்கை வைத்தார்.

அ) ராஜா தனது வணிகத்தை ஓர் பங்குடமையாக மாற்றத் தீர்மானிப்பதற்கான நான்கு காரணங்களைக் குறிப்பிடுக.

ஆ) செல்வா சொந்தக் கம்பனியாக மாற்றுவதற்கு எண்ணியாமைக்கான காரணங்களின் நான்கினைக் குறிப்பிடுக.

5. அ) சமகாலத்தில் கூட்டுறவு வணிகங்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் நான்கினைக் குறிப்பிடுக.

ஆ) உள்ளூராட்சிமன்றுக்குட்பட்ட வணிகங்கள் தொடர்பான பண்புகள் நான்கினைக் குறிப்பிடுக.

03) 1. மனிதனுடைய தேவைகள் விருப்பங்களைப் பூர்த்தி செய்வது தொடர்பில் வணிகங்கள் பல்வேறு புத்தாக்கங்களை மேற்கொள்ளுகின்றது

அ) முயற்சியாண்மையின் போக்குகள் எவை?

ஆ) சிற்றளவு வணிகங்களின் வெற்றிக்கு முயற்சியாண்மை பங்களிப்பு செய்யும் முறைகள் நான்கினைக் குறிப்பிடுக.

2. அ) சங்கர் என்பவர் ஓர் அரச முகாமைத்துவ உதவியாளர் அவர் தனக்கு கிடைத்த 50000/= ரூபா சம்பளத்தில் 10000/= ரூபாவை நுகர்வுத்தேவைக்காப் பயன்படுத்தியதுடன் 30000/= ரூபாவை வங்கிக்கணக்கொன்றில் வைப்புச் செய்தார். அத்துடன் குத்தகை அடிப்படை கொள்வனவு செய்த மோட்டார்வாகனத்திற்கான தவணைப்பணமாக 10000/- ரூபாவை செலுத்தினர்.

மேற்கூறப்பட்ட சம்பவத்தில் கூறப்பட்டவாறு பணத்தின் தொழிற்பாட்டினை சரியான ஒழுங்கில் குறிப்பிடுக.

ஆ) கடன்ட்டையைப் பயன்படுத்தி கொடுக்கல் வாங்கலை மேற்கொள்வதனைக் காட்டிலும் வரவு அட்டையைப் பயன்படுத்துவதன் நன்மைகள் நான்கினைக் குறிப்பிடுக.

3. அ) இலங்கையில் தொழிற்படும் நிதிநிறுவனங்களின் பிரதான வகைகளைக் குறிப்பிடுக.

ஆ) இலங்கை மத்திய வங்கியினால் வணிகங்களுக்கு ஆற்றப்படும் பிரதான சேவைகள் நான்கினைக் குறிப்பிடுக.

4. அ) சேமிப்பு வைப்பிற்கும் நடைமுறை வைப்பிற்கும் இடையிலான வேறுபாடுகள் நான்கினை குறிப்பிடுக.

ஆ) கூட்டுறவுக்கிராமிய வங்கிக்கும் சிக்கனக்கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கத்திற்கும் இடையிலான பிரதான வேறுபாடு யாது?

5. அ) இலங்கைவங்கி சங்கானைக் கிளையில் நடைமுறைக்கணக்கு பேணும் சிவா என்பவரால் மக்கள் வங்கி சுண்ணாகக் கிளையில் நடைமுறைக்கணக்குப் பெணும் சசி என்பவருக்கு வழங்கப்படட குறுக்குகோடிட்ட காசோலை மக்கள் வங்கியால் மறுக்கப்பட்டது. இதற்கான நான்கு காரணங்களைக் குறிப்பிடுக.

ஆ) நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் என்றால் என்ன?

04) 1. வணிகங்கள் சமகாலத்தில் நிலவுகின்ற இடர்களில் இருந்து பாதுகாப்புப் பெறுவதற்கு காப்புறுதி செய்கின்றனர்.

அ) காப்புறுத்தக் கூடிய இடர் ஒன்றின் பண்புகள் நான்கினைக் குறிப்பிடுக.

ஆ) ஆயுள்காப்புறுதி ஒப்பந்தம் ஒன்றுடன் தொடர்புடைய தத்துவங்கள் இரண்டினை குறிப்பிடுக.

2. சிறந்த தீர்மானங்களை நிறைவேற்றுவதற்கு வணிகச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கும் பயனுறுதி வாய்ந்த தொடர்பாடல் அவசியமானதாகும்.

அ) பயனுறுதிவாய்ந்த தொடர்பாடலின் பண்புகள் நான்கினைக் குறிப்பிடுக.

ஆ) சிறந்த தொடர்பாடலின் தடைகள் நான்கினைக் குறிப்பிடுக.



kalvi.lk

3. அ) திருகோணமலையில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு மாபிள் உற்பத்திகளைக் கொண்டு செல்வதற்கான போக்குவரத்து ஊடகம் ஒன்றைத் தெரிவு செய்யும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் நான்கினை குறிப்பிடுக.

ஆ) களஞ்சியசாலை ஒன்றை நிறுவும்போது கவனத்தில் கொள்ளப்படும் காரணங்கள் எவை?

4. அ) நாடொன்று வெளிநாட்டு வியாபாரத்தில் ஈடுபடுவதனால் கிடைக்கும் நன்மைகள் நான்கினைக் குறிப்பிடுக.

ஆ) சுதந்திரவர்தகத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும் தீர்வற்ற தடைகள் நான்கினைக் குறிப்பிடுக.

5. கொவிற்தொற்றுக் காரணமாக இலத்திரனியல் வணிகமானது பிரபல்யம் அடைந்து வருகின்றது. இதன்மூலம் நுகர்வோர் அடைந்துகொள்ளும் சாதக, பாதக விடயங்கள் தொடர்பில் விமர்சிக்குக.

## பகுதி - II

05) 1. “ஏனையோர்களைக் கொண்டு கருமங்களை ஆற்றுவிக்கின்ற கலை முகாமைத்துவம் ஆகும்’

அ) மேற்கூறப்பட்ட வரைவிலக்கணத்தில் கூறப்பட்டுள முகாமத்துவத்தின் மூலக்கூறுகள் இரண்டிகைக் குறிப்பிடுக.

ஆ) அவற்றுக்கிடையிலான தொடர்பினை வரைபடத்தினூடாக விளக்குக.

2. ஓர் முகாமையாளர் முகாமையாளராக இருப்பதற்கு கொண்டிருக்க வேண்டிய அடிப்படைத் தகுதிகளை வரைபடத்தினூடாக காட்டுக.

3. வரையறுக்கப்பட்ட வளங்களைப்பயன்படுத்தி எல்லையற்ற மனித விருப்பங்களைப் பூர்த்தி செய்ய முற்படும்போது திட்டமிடல் என்பது முக்கியமானது ஆகும்.

அ) திட்டமிடலின் முக்கியத்துவங்கள் நான்கினைக் குறிப்பிடுக.

ஆ) திட்டமிடல் செயன்முறையினை ஒழுங்குவரிசையில் குறிப்பிடுக.

4. அ) சிலசமயங்களில் திட்டமிடலினை மேற்கொள்ளும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்ற பொழுதிலும் அவை தோல்வியடைகின்றன. அவ்வாறு திட்டமிடல் தோல்வியடைவதற்கான காரணங்கள் நான்கினைக் குறிப்பிடுக.

ஆ) திட்டமிடலின் கூறுகள் நான்கினைப் பெயரிடுக.

5. முகாமைத்துவத்தின் வரைவிலக்கணத்தில் காணப்படும் முக்கிய பதங்களைக் குறிப்பிட்டு அவற்றிற்கிடையிலான தொடர்பினை விளக்குக.

06) 1. அமைப்பொன்றின் நோக்கம், இலக்கினைப் பயனுறுதிமிக்க முறையில் அடைந்துகொள்வதற்கு வேலைகளை இனங்காணல் வேலைப்பகிர்வினை மேற்கொள்ளல், திணைக்களப்படுத்தல் உள்ளிட்ட செயன்முறை ஒழுங்கமைத்தல் ஆகும்.

அ) ஒழுங்கமைத்தல் செயன்முறையின் படிமுறைகளை ஒழுங்கு முறையில் குறிப்பிடுக.

ஆ) அதிகாரக்கையளிப்பு, அதிகாரப்பரவலாக்கல் என்பன ஒருவிடயமாகக் கருதப்படுகின்றது. இதனை ஏற்றுக்கொள்ள முடியுமா? காரணம் தருக.

2. அ) உயரமான ஒழுங்கமைத்தல் கட்டமைப்பின் நன்மைகள், தீமைகள் தலா இரண்டு வீதம் குறிப்பிடுக.

ஆ) தலைவர், முகாமையாளர் ஆகியோரிக்கு இடையிலான வேறுபாடுகளைக் குறிப்பிடுக.

3. அ) துசி என்பவர் பாடசாலை ஒன்றின் அதிபர் ஆவர் இவர் ஆசிரியர்கள், மாணவர்களின் அபிலாசைகளை விளங்கிக் கொண்டு பாடசாலைக் கருமங்களை முன்னெடுக்கக்கூடியவர். தரன் என்பவர் இன்னொரு பாடசாலை அதிபர் ஆவர் இவர் தன்னிச்சையாக தீர்மானங்களை நிறைவேற்றி அதனைக் கண்டிப்புடன் நடைமுறைப்படுத்துவார். இவர்களின் தலைமைத்துவப் பங்குகள் முறையே

துசி…………………………….

தரன் …………………………..

ஆ) பாடசாலைச் செயற்பாடு தொடர்பில் நீர் குறிப்பிட்ட தலைமைத்துவப் பங்குகளில் எது சிறந்தது என நீர் கருதுவீர் அதற்கான காரணங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

4. அ) “நிதிசார ஊக்கப்படுத்தல்களை மேற்கொள்வது தொடர்பில் நிறுவனத்திற்கு எந்தவோர் பணக்கிரயமும் ஏற்படுவதில்லை. இக்கூற்றினை நீர் ஏற்றுக்கொள்கிறீரா? காரணம் தருக.

ஆ) ஊக்கப்படுத்தல்களை வழங்குவதனால் நிறுவனம் ஒன்று பெற்றுக்கொள்ளக் கூடிய அனுகூலங்கள் நான்கினைக் குறிப்பிடுக.



kalvi.lk

5. அ) கட்டுப்படுதல் செயன்முறையின் படிமுறைகளை ஒழுங்கில் தருக.
ஆ) கட்டுப்படுதல் முறைகளைக் குறிப்பிட்டு ஒவ்வொரு உதாரணம் தருக.

07) 1. 'உள்ளீடுகளை நிலைமாற்றம் செய்வதனூடாக வெளியீடுகளைப் பெற்றுக் கொள்வதுடனான திட்டமிடலும் கட்டுப்படுத்தலும் செயற்பாட்டு முகாமைத்துவம் ஆகும்'
அ) செயற்பாட்டு முகாமைக் கருமங்களைக் காட்டிலும் செயற்பாட்டு முகாமையாளரால் ஆற்றப்படவேண்டிய ஏனைய கருமங்கள் மூன்றினைக் குறிப்பிடுக.
ஆ) செயற்பாட்டு முகாமைக் கருமங்களை விட செயற்பாட்டு முகாமைத்துவத்தின் பிரதான பகுதிகள் இரண்டினைக் குறிப்பிடுக.
2. அ) தள அமைப்புத் திட்டத்தின் நோக்கங்கள் நான்கினை குறிப்பிடுக.
ஆ) தள அமைப்புத்திட்டத்தின் முக்கியத்துவங்கள் நான்கனை குறிப்பிடுக.
3. கலா என்பவர் திருமணப் பெண்களை அலங்கரிப்பதற்கான அழகுக் கலையகம் ஒன்றையும் அவரது கணவரான சுதன் திருமண அழைப்பிதல்களை அச்சிடும் அச்சகம் ஒன்றையும் நடாத்தி வருகின்றனர்.
அ) இவர்களின் உற்பத்திகளை உற்பத்தியின் வகைகளில் எதனுள் உள்ளடக்குவீர்.
கலா ……………………………………………
சுதன் ……………………………………………
ஆ) அதற்கான காரணங்களைக் குறிப்பிடுக.
4. அ) உற்பத்தி நிறுவனம் ஒன்று தமது செயற்பாட்டிற்கு பல்வேறு பொருட்களைக் கொள்வனவ செய்ய வேண்டும். இவ்வாறு பொருள்கொள்வனவின்போது கவனத்தில் கொள்ளவேண்டிய விடயங்கள் நான்கினைக் குறிப்பிடுக.
ஆ) மூலப்பொருட்களைக் கொள்வனவு செய்யும் முறைகள் எவை?
5. "இருப்புக்கள் தொடர்பான கிரயங்களை இழிவாகப் பேணக்கூடிய வகையில் மேற்கொள்ளப்படும் அனைத்து நடவடிக்கைகளும் இருப்புக்கட்டுப்பாடு ஆகும்.
அ) இருப்புக்கட்டுப்பாட்டினை முறையாகப் பேண வேண்டியதன் தேவைகள் நான்கினைக் குறிப்பிடுக.
ஆ) பற்றாக்குறை இருப்பினைப் பேணுவதால் வணிகம் ஒன்று எதிர்நோகக்கூடிய பிரச்சினைகள் நான்கினைக் குறிப்பிடுக.

08) 1. உற்பத்தி நிறுவனம் ஒன்று தொடர்பான தகவல்கள் கீழ்வருமாறு

| | |
|---|---|
| அலகொன்றிற்கான உற்பத்திக்கிரயம் | 35/- |
| மொத்த நிலையான கிரயம் | 25000/- |
| அலகுஒன்றின் விற்பனை விலை | 50/- |

உற்பத்தி செய்யப்பட்ட அலகுகளின் எண்ணிக்கை 2500 அலகுகள்
பின்வருவனவற்றினைக் கணிப்பிடுக.
i) அலகிற்கான பங்களிப்பு
ii) இலாபநட்டமற்றபுள்ளி
iii) இலாபநட்டமற்றபுள்ளியில் வருமானம்
iv) 10000/- இலாபமாக உழைக்க வேண்டுமாயின் விற்பனை செய்யவேண்டிய அலகுகளின் எண்ணிக்கை

2. அ) "பொருள் ஒன்றின் தரம் பல உறுப்புக்களின் சேர்க்கையாகும்" தரமான தொலைபேசி நிறுவனம் ஒன்றின் தரத்தின் கூறுகள் நான்கினைக் குறிப்பிடுக.
ஆ) பாடசாலை ஒன்றின் மகுடவாக்கியம் "சிறந்த கல்வியே எங்கள் கண்கள்" என்பதாகும். இதனை அடைவதற்கு குறித்த பாடசாலையினால் பின்பற்றப்படும் தரக்கட்டுப்பாட்டு முறைகள் நான்கினைக் குறிப்பிடுக.
3. அ) சந்தை என்பதனை வரையறுக்குக.
ஆ) நவீன பரிமாற்றுப் பொருளாதாரத்தில் சந்தை தொழிற்படும் முறையினை வரைபடத்தில் காட்டுக.
4. அ) பரிமாற்றம் ஒன்று இடம்பெறுவதற்கான நிபந்தனைகள் நான்கினைக் குறிப்பிடுக.
ஆ) சிறந்த சந்தை ஒன்றின் பண்புகள் நான்கினை குறிப்பிடுக.
5. அ) சந்தைப்படுத்துனர் பார்வையில் நுகர்வுப்பொருட்களின் வகைகளைக் குறிப்பிடுக.
ஆ) முழுமையான சந்தைபடுத்தல் எண்ணக்கருவின் கூறுகள் நான்கினைப் பெயரிடுக.


kalvi.lk

Education கல்வி அධ්‍යාපන

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினுடாக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

**kalvi.lk**

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page